தமிழக சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1968 ஆகஸ்ட் 19.

———

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**, புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

திரு. டி. வேலுச்சாமி, முன்னாள் உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1957-ல் இருந்து 1959-வது ஆண்டு வரை ஆலங்குளம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. டி. வேலுச்சாமி அவர்கள் 10—8—1968 அன்று மறைந்துவிட்டதைக் குறித்து, இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து, ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(பேரவையில் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றார்கள்.)

2. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Repayment to Reserve Bank

*21 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there was a demand from the Reserve Bank of India in the first part of March 1967, for repayment of overdraft to the tune of Rs. 3 crores;

(*b*) whether it is a fact that a sum of Rs. 3 crores was received from the Central Government in February–March 1967; and

(*c*) if so, the date on which the said amount was received?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பொது நலனை முன்னிட்டு இவ் விவரங்களை வெளியிடுவது உகந்ததல்ல என அரசாங்கம் கருதுகிறது.

THIRU K. VINAYAKAM : May I know what necessitated this kind of overdraft, Sir?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இது ஓவர்டிராப்ட் பற்றி பொதுவான கேள்வி அல்ல. குறிப்பிட்ட காலகட்டத்தைப் பற்றிய கேள்வி. ஆகவே, இதுபற்றித் தகவல் வெளியிடுவது பொது நலனுக்கு உகந்ததல்ல என்று சொன்னேன். பொதுவாக, ஓவர்டிராப்ட் ஏற்படுவது இரண்டு வகையில் ஏற்படலாம். ஒன்று வரவினத்திற்கு மேற்பட்டுச் செலவு செய்துவிட்டு ஓவர்டிராப்ட் வாங்குவதுண்டு. இந்த அரசு அந்த முறையில் பெற்றதில்லை. இரண்டாவது சில நேரங்களில் மத்திய அரசிடமிருந்து வர வேண்டிய பணம் வருவதற்கு குந்தகங்கள் ஏற்படுகிறபோது டெம்ப்ரவரி ஓவர்டிராப்ட் என்ற முறையில் வாங்கப்படுவது.

DR. H. V. HANDE : Will the Hon. Chief Minister be pleased to state whether it is a fact that there was little credit with the Reserve Bank of India by the end of the last financial year and whether it is really a fact that a few cheques issued by the Government of Madras bounced back ? May I also know whether there are any overdraft facilities for the Government with the Reserve Bank to prevent such unfortunate situations? What is the credit of overdraft—the amount of overdraft—allowed for our Government with the Reserve Bank of India ? Will the Hon. Chief Minister be pleased to state these facts ?

THE HON. THIRU C. N. ANNADURAI : I have to reiterate that in public interest, such details cannot be given.

THIRU K. VINAYAKAM : May I know whether cheques issued by our State Government were dishonoured for want of funds with the Reserve Bank of India?

THE HON. THIRU C. N. ANNADURAI : If the hon. Member is in possession of the fact, he can pass it on to me.

Pension to the disabled

* 22 *Q.*—THIRU T. MARTIN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is a proposal to give pension to all disabled persons in the State who could not work and earn their livelihood ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. டி. மார்டின் : இன்றைய ஆளுங்கட்சியின் தேர்தல் அறிக்கையில் 6-வது பக்கத்தில் 26-வது பாராவில் உறுப்புக் குறைப் பாட்டால் உழைக்க முடியாமல் இருப்பவர்களுக்கும், உதவியற்ற விதவைகளுக்கும் அரசாங்கம் உதவிப் பணம்தர முயலுவது